# இறைவனின் அன்னையாகிய தூய கன்னி மரியா பெருவிழா

## சனவரி 01

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று புத்தாண்டு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள். பிறந்திருக்கும் இப்புதிய ஆண்டில், இறைவனின் அருளிலும், ஆசீரிலும் அனைவரின் வாழ்வும் நலமாய், வளமாய், மகிழ்வாய் அமைந்திட இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களும் + செபங்களும்.

தாய்த் திருச்சபை ஆண்டின் இந்த முதல் நாளை அன்னைமரிக்கு அர்ப்பணித்திருக்கின்றது. அன்னைமரிக்கு ஏன் அர்ப்பணிக்கின்றோம் என்றால், அன்னைமரி, உருவில்லா இறைவனுக்கு உருக்கொடுத்து, உலகிலே உதிக்கச் செய்தவள். இறையாட்சி இம்மண்ணிலே தழைத்தோங்கிட, இறைதிருவுளம் ஏற்று, தன்னையே முழுமையாக அர்ப்பணித்தவள். ஏழை, எளியவரின் வாழ்வு செழித்தோங்கிட, நீதியை நிலைநாட்டிட தன்னை அர்ப்பணித்தவள். தூய வாழ்வு, அன்பு, தாழ்ச்சி, கீழ்படிதல், எளிமை, தியாகம், மனிதநேயம் என அனைத்து குணநலன்களின் ஒட்டுமொத்த உருவமானவள். அன்னையின் அரவணைப்பில் நாமும் இத்தகைய பண்புகளில் சிறந்தோங்கிட இன்றைய நாள் அழைப்பு விடுக்கின்றது, அன்னையின் ஆசீரில் இந்நாளை இனிதாகத் தொடங்கிடுவோம்.

மலர்ந்துள்ள இப்புத்தாண்டில், இறைவன் முதல்வாசகத்தின் வழியாக, நமது வாழ்வு வளமாய் அமைந்திட, இறைவன் தமது ஆசீரை நிறைவாக கொடுப்பதை காண்கின்றோம்.

விவிலியம் முழுவதிலும் அவரது ஆசீரை நமக்குக் கொடுத்திருக்கின்றார். படைப்புக்கள் அனைத்தையும் ஆசீர்வதித்து, பலுகிப் பெருகச் செய்தார். ஏழாம் நாளை ஆசீர்வதித்துக் கொடுக்கின்றார். தம் உயிர்மூச்சையும், சாயலையும் தந்து,

மானிடரைப் படைத்து, ஆசி அளித்து, "மனிதர்' என பெயரிடுகின்றார். நாம் மேற்கொள்ளும் அனைத்து வேலைகளையும் ஆசீர்வதிக்கின்றார். நாம் போகும்போதும், வரும்போதும் நமக்கு ஆசி வழங்கி காக்கின்றார். துயரினில் நாம் துவண்டிடும்போது "அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கின்றேன்" என்ற ஆசீரை அளிக்கின்றார். நாம் கவலையில், கண்ணீரில் கலங்கி நிற்கும்போது, "உங்கள் துக்கம் சந்தோசமாக மாறும்" என ஆசீர் அளிக்கின்றார். நான் தனிமையில் தவித்திடும்போது, அம்மையப்பனாக உடனிருந்து, " உன் தாயும், தந்தையும் கைவிட்டாலும், நான் உன்னை கைவிட மாட்டேன்" என்ற ஆசீரைத் தருகின்றார். அனைத்திற்கும் மேலாக, தன்னையே கையளித்து, நற்கருணையின் வடிவில், "உலக முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன்" என்ற ஆசீரைத் தருகின்றார். அவரது ஒவ்வொரு ஆசிகளையும் நாம் என்றும் நமதாக்கிக் கொள்ள, இறைவன் காட்டிடும் வழியில், நம் வாழ்வுப் பயணத்தைத் தொடர்ந்திடுவோம். அதற்கான அருள் வேண்டி, இப்புனிதத் திருப்பலியில் நம்மை அர்ப்பணிப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. 'நீயே அனைத்திலும் ஆசியாக விளங்குவாய்" என்ற தெய்வமே,

தொடங்கியிருக்கின்ற இப்புதிய ஆண்டில், நாங்கள் உற்சாகம், ஊக்கம், மற்றும் நம்பிக்கையுடன், புத்துணர்ச்சியுடன், புதிய பாதையில், புதுப்பொலிவுடன், தொடர்ந்திடவும், எங்கள் எண்ணங்கள், கனவுகள் நிறைவேறவும், பாவம் நிறைந்து வாழ்வை விடுத்து, நல்ல மனமாற்றம் நிறைந்த வாழ்வு வாழ்ந்திடவும், என்றும் உம் ஆசிக்குரிய மக்களாகவும் வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. “உங்கள் சொல்லாலும், செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள்” என்ற தெய்வமே,

இப்புதிய ஆண்டின் முதல் நாளை அன்னைமரிக்கு அர்ப்பணித்துத் தொடங்கி, அன்னையை மகிமைப்படுத்தியிருக்கின்றோம். இறையன்னையைப் போற்றி, மகிமை செய்துவிட்டு, நம் இல்லத்தில் இருக்கும் அன்னையரை, தந்தையரை மதிக்காது, கண்டுகொள்ளாது, அவர்களின் முதுமைக் காலத்தில்; அவர்களிடம் அன்பு, பாசமின்றி அவர்களின் அவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாது, புறக்கணித்து வாழும் பிள்ளைகளின் கடின உள்ளத்தை மாற்றி, அவர்கள் பெற்றோரை நேசித்து, அன்பும், அக்கறையுமுள்ளவர்களாக வாழ்வதே அன்னைமரிக்கு ஏற்புடைய செயலாகும் என்பதை உணாந்து, வாழ்ந்திட, வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. “உன்னுள் சமாதானம் நிலவுவதாக” என்ற தெய்வமே,

இன்று பல நாடுகளிடையே அமைதி, சமாதானமின்றி, ஆணவமும், தன்னலமும் மேலோங்கி நிற்கின்றது. வன்முறையும், தீவிரவாதமும் அதிகரித்து, நெஞ்சில் சிறிதும் கருணை, இரக்கமின்றி உயிரின் மதிப்பை உணராது, பல உயிர்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலையகற்றி, உம் பிறப்பில் நீர் கொண்டு வந்த அமைதியை, ஒவ்வொருவரிலும் விதைத்து, மனிதநேயத்தை வளர்த்திட, வரம் வேண்டி இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. “நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்” என்ற தெய்வமே,

பல்வேறு நோய்களினால் துயருறும் மாந்தர்களை அர்ப்பணிக்கின்றோம். அவர்கள்மீது உம் கருணைக்கண்களை திருப்பியருளும். நோய்க்கு மருத்துவம் செய்ய வசதியின்றியும், இன்னும் பலர் வசதியிருந்தும் கவனித்திட உறவுகளின்றியும், போராடும் அவர்களை நீரே உம் திரு இரத்தத்தால், உம்

திருக்கரத்தால் தொட்டு, அவர்களின் நோய்களைக் குணமாக்கி, பரிபூரண உடல்நலனைப் பெற்று, உமக்கு என்றும் நன்றியுள்ள மாந்தர்களாக, சாட்சியுள்ளவர்களாக வாழ்ந்திட, அருள் தர வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. “உங்களை முன்னைய நன்னிலைக்கு உயர்த்தி, நீங்கள் பெயரும், புகழுமாறு செய்வேன்” என்ற தெய்வமே,

இவ்வுலகில் பல்வேறு இயற்கை சீற்றங்களினால் தங்கள் உறவுகள், உடைமைகளை இழந்து தங்கள் அடுத்தகட்ட வாழ்விற்கு செல்ல இயலாத வகையில் கதியற்று நிற்கும் மாந்தர்களுக்கு, நீரே எல்லாமுமாக இருந்து, அவர்கள் இழந்தவற்றை இருமடங்காகக் கொடுத்து, அவர்களை முன்னைய நன்னிலைக்கு உயர்த்தி, அவர்களின் கண்ணீரை மாற்றி, மகிழ்வினைத் தந்து, ஏற்றம் நிறைந்த வளமான வாழ்வைப் பெற்றிட, வரம் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com